பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை : 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ., எம். பி.

மலர் : 15] சென்னை : புரட்டாசி 20௳ (6—10—67) வெள்ளி ★ வெளியூர் : புரட்டாசி 21௳ (7—10—67) சனி [இதழ் : 95

ஏட்டிக்குப் போட்டி !

"புகைபிடித்தலே பல்வேறு இதய நோய்களுக்குக் காரணம்" என்று கூறி, அமெரிக்காவில் அதற்கு எதிராகப் பிரசாரம் நடந்துகொண்டிருக்கையில், இங்கிலாந்தின் நிலை வேருக இருக்கிறது!

பிரிட்டனில் உள்ள டாக்டர்களில் மூன்றில் இரண்டுபேர் புகைபிடிக்கும் வழக்கத்திற்கு அடிமையாக இருக்கிருர்கள்!

புகைபிடிக்கும் வழக்கம் இருந்தும்கூட, இங்கிலாந்தில் புற்றுநோயினல் மரணத்தைத் தழுவும் டாக்டர்களின் எண்ணிக்கை கடந்த காலத்தைவிட இப்போது 30 சதவிகிதம் குறைந்துள்ளதாம்.

கருத்துக்குப் பஞ்சமில்லா நாடு இது!

காலத்துக்கு ஏற்றவாறு அதைப் பயன்படுத்துவதில்தான் சிறப்பு

வள்ளலாருக்கும் காந்தியாருக்கும் வாழ்க்கையில் ஒற்றுமை உண்டு

காந்தியார் நினைவுநாள் விழாவில் அண்ணு

இராமலிங்கர் மன்றச் சார்பில் 5—10—67 அன்று இராசேசுவரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற காந்தியார் நினைவுநாளில் முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் ஆற்றிய உரை:—

"இராமலிங்க அடிகள் வாழ்க்கைக்கும்—காந்தி அடிகள் வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

இந்த நாட்டில் இல்லாத கருத்துக்காக நாம் எந்த நாட்டிலும்—எந்த மொழியிடத்திலும் கடன் வாங்காத அளவுக்கு இங்கே கருத்துக் குவியல் உண்டு!

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மொழிக்கு இலக்கணம் வகுத்து, 'இல்லறம் எப்படி இருக்க வேண்டும்—துறவறம் என்றால் எப்படி இருக்க வேண்டும்' என்பதற்கெல்லாம் நம்மிடத்திலே கருத்துக் குவியல் நிரம்ப உண்டு!

பாங்கிகளுக்கெல்லாம் தலைமை பாங்கியான ரிசர்வ் பாங்கியில் பணம் நிரம்பி இருப்பதைப் போல், நம்மிடத்தில் கருத்துக் குவியல் நிரம்ப உண்டு!

ரிசர்வ் பாங்கியின் முன்னல் நின்றுகொண்டு, 'ஆகா! எவ்வளவு பணம் இருக்கிறது" என்று வயிற்றைத் தடவினல் பசி நீங்காது! பையில் இருக்கும் பணத்தின் அளவுக்குத்தான் பசி நீங்கும்!

நம்மிடத்தில் ஏராளமான கருத்துக்கள் இருந்தும், நாம் ஏன் இந்த நிலைக்கு வந்தோம்?—அதைத்தான் நாம் ஆராய வேண்டும். இதைச் செய்வதால்தான், என்னை, அழுக்கான வனுக—அருவருக்கத்தக்கவனுகச் சிலர் நினைக்கிருர்கள்!

விரலில் போட்டுக்கொள்ளுகின்ற மோதிரம் காணுமல் போய்விட்டால்—சேற்றிலே விழுந்துவிட்டால்—தேடி எடுக்கும்போது கையிலே சேறு ஒட்டிக்கொள்ளும் அதனல், சேறு என்று ஒதுக்கிவிட முடியாது!

யாராவது அவர்களைப் பார்த்து, 'சேற்றிலே இருப்பவன்' என்று சொன்னல், அவர்கள் எண்ணத்திலே இருக்கிற சேற்றுக்கு நாம் பரிதாபப்பட வேண்டும்!

மனிதரில் எடுத்துக்கொண்டாலும், ஏதோ ஒரு தவிப்பு அவர்கள் உள்ளத்தில் இருக்கிறது!

'இதை நீக்குவது எப்படி?' என்பதற்கு இன்றைய விழா பயன்பட வேண்டும். இந்த விழா, 'சுவைமிகுந்தது' என்ருலும், இதை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பதில் நாமெல்லாம் கவனம் செலுத்தவேண்டும்.

இராமலிங்க அடிகளைப்போல் சிலர் தலையில் துணி போட்டுக் கொள்வதால், அவரைப்போல் புறத்தோற்றத்தைப் பெற்றுக் கொள்வதாகக் கருதுகிருர்கள்!

புறத்தோற்றத்தில் காட்டுகின்ற அக்கறையை, மனதில்—உள்ளத்தில் — செயலில் நாம் கொண்டு வருகிருேமே என்ருல், உபசாரத்திற்கு வேண்டுமென்ருல், 'சரி' என்று சொல்லிக் கொள்ளலாம்; உண்மையில் அது இல்லை.

போன ஆண்டு கொடுத்த இரயில் டிக்கெட் அளவிலும் நிறத்திலும் ஒரே மாதிரியாக இருந்தாலும், அதை வைத்துக்கொண்டு, இந்த ஆண்டு போக ஒத்துக்கொள்ள மாட்டார்கள்; அதைப்போல நாம், காலத்தை வைத்துக் கருத்துக்களைக் கணக்கிடவேண்டும்!

நாம், கருத்துக்கள் அற்றுத் தவிக்கவில்லை! 'இருப்பதில், எதைப் பயன்படுத்துவது' என்று தெரியாமல் தவிக்கிருேம்!

நம்முடைய எண்ணங்கள் விரிவடைந்து இருக்கின்றன; ஆனல், 'நல்லதற்கா கெட்டதற்கா' என்றுதான் தெரிந்து கொள்ளவில்லை!

அளவு—வகை—வேகம் மூன்றும் அதிகமாக இருந்தும், 'எதை எதற்காகப் பயன்படுத்த வேண்டும்' என்று அறிந்துகொள்ளவில்லை!

ஆனல், நம்மிடத்தில் நிரம்பத் தரப்பட்டு இருக்கிறது. எண்ணி எண்ணி—எழுதி எழுதி எல்லாம் அடுக்கி வைக்கப்பட்டு இருக்கிறது; எதை ஏற்றுக் கொள்வது என்று புரியாமல் இன்று இருக்கிருேம்!

இன்று காலையில் என்னை சந்தித்தவர்கள், உங்களையா அழைத்தார்கள்—காந்தியாரைப் பற்றிப் பேச?' என்று கேட்டார்கள்.

காந்தியாரால் இலாபம் அடையாதவர்களில் நான் ஒருவன்! 'காந்தியாருடைய கொள்கைக்கு விரோதி' என்றுகூடச் சிலரால் கருதப்பட்டவன்! அதனல், கிடைத்திருக்கக்கூடிய இலாபங்களைகூட இழந்தவன் என்பதை நண்பர்கள் அறிவார்கள்.

வள்ளலாருடைய எளிய தோற்றத்தில் எனக்குப் பற்று உண்டு.

எளிய தமிழில் எதையெதையோ சொல்ல நினைத்தார்! யாருக்கு சொல்ல நினைத்தார்?—எளியவர்களுக்கு, ஏழைகளுக்குச் சொல்ல நினைத்தார்; அதனல், எளிய தமிழில் கூறினர்!

பூமியில் உள்ள தங்கம் அத்தனையையும் நகையாகச் செய்து கொள்ள முடியாது; ஆகையால், தேவையான அளவுக்கே தங்கத்தைக் கொடுத்து நகைகள் செய்யச் சொல்வதுபோல், நம்மிடத்தில் ஏராளமான கருத்துக் குவியல் இருந்தாலும், தேவையானதைப் பயன்படுத்த முன்வர வேண்டும்."

அமைச்சர் கருணுநிதி வீடு திரும்பினர்

சென்னை, அக். 6—

கார் விபத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்டு கடந்த 12நாட்களாக அரசினர் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பொதுப் பணி அமைச்சர் மு. கருணுநிதி அவர்கள், உடல்நலம் பெற்று இன்று காலை 9-30 மணிக்கு வீடு திரும்பினர்.

அறிஞர் அண்ணு, மற்றும் கழக முன்னணித் தலைவர்கள், மற்ற கட்சிகளைச் சார்ந்த பிரமுகர்கள் பலரும் வீட்டிற்கு வந்து நலம் விசாரித்தனர்.

'முரசொலி'மாறன் வேட்பு மனு தாக்கல்

சென்னை, அக். 6—

தென் சென்னைப் பாராளுமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் கழக வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள தோழர் 'முரசொலி' மாறன், இன்று காலை தமது வேட்பு மனுவை தேர்தல் அதிகாரியிடம் தாக்கல் செய்தார்.

தோழர் முரசொலி மாறன் வேட்பு மனுவை ஆதரித்து இராஜாஜி, அறிஞர் அண்ணு, திருமதி இராணி அண்ணு, முஸ்லிம் லீக் தோழர் காஜா மொகிதீன் ஆகியோர் முறையே முன்மொழிந்திருக்கின்றனர்.

இன்னுயிரை ஈந்த 86 பேர்!

செப்டம்பர் மத்தியிலும், அக்டோபர் துவக்கத்திலும் 'நாதுலா', 'சோலா' ஆகிய எல்லைப் பகுதிகளில் ஏற்பட்ட சீனத் தாக்குதலினல் இறந்தோர் தொகை முறையே 65; 21 என்று இந்திய அரசின் அதிகாரபூர்வமான அறிவிப்பு ஒன்று கூறுகிறது.

இரண்டு இடங்களிலும் நிகழ்ந்த சண்டைகளில் காயமடைந்தோரின் தொகை 165 ஆகும்.

ஆக மொத்தத்தில் இரத்தம் சிந்தியிருப்பவர் தொகை 251-ஆக இருக்கிறது!

மொழியியல் துறையில் ஆங்கிலத்தில்தான் அதிக நூல்

மொழியின் பல்வேறு பகுதிகள், அமைப்பு ஆகியவற்றைப் பற்றி விஞ்ஞான முறையில் ஆராய்ந்து கூறும் 'மொழியியல்' (Philology) துறையில், உலகிலேயே ஆங்கிலத்தில்தான் அதிகமான நூல்கள் வெளியாகியுள்ளன.

ஆங்கிலத்தில் — இத்துறையில் 60 சதவிகித நூல்களும், இரஷ்ய மொழியில் 24 சதவிகிதமும், பிரெஞ்சு—ஜெர்மன் மொழிகளில் முறையே நான்கு—நான்கு சதவிகித நூல்களும் வெளியாகியுள்ளன; மிகுந்த 8 சதவிகித நூல்கள் ஏனைய உலக மொழிகளில் வெளியாகியுள்ளன.

பிரான்சு நாட்டைப் பற்றி முன்பெல்லாம் வேடிக்கைக் கதை ஒன்று கூறுவார்கள்;—ஓட்டலுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு 'இப்போது யாருடைய அமைச்சரவை?' என்று கேட்பார்களாம்—சமுதாயத் தத்துவங்களுக்குச் சொந்தக்காரர்களான பிரெஞ்சுக்காரர்கள்!

இப்போதுகூடச் செய்தி உலகம் போகும் போக்கு அப்படித்தான் இருக்கிறது! பிரான்சில் கேட்டதுபோல் கேட்டால், 'உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே இத்தையும் நடந்துமுடிந்துவிட்டது' என்று இப்போது பதில் வரும்போல் இருக்கிறது!

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர்கூட, 'எகிப்து அதிபர் நாசர் பதவி விலகிவிட்டார்; புதிய ஜனதிபதி ஜக்கரையா மொய்தீன்' என்று மாலையில் வரும் தமிழ்ச் செய்தித்தாள் ஒன்றில் தகவல் வந்திருந்தது!

எவ்வளவு விரைவில் அது வந்து உடன், எவ்வளவுவிரைவில், 'இல்லை' என்று திரும்பப் பெறப்பட்டதோ தெரியவில்லை—அந்த ஒரே ஒரு தமிழ் நாளிதழைத் தவிர வேறு எந்த நாளிதழும் அச்செய்தியைப் போடவே இல்லையென்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்!

'செய்தி' என வந்து—அது அச்சில் ஏறுவதற்குள் அப்படி மாற்றங்கள் வந்துகொண்டே இருக்கின்றன மேலே மேலே! விண்யுகம் அல்லவா!

இங்கே வங்காளத்தைப் பற்றிய செய்தியைக்கூடப் பாருங்கள்—காலைப் பதிப்புகளில் ஒரு தகவல்! மாலைப் பதிப்புகளில் வேருேர் அறிவிப்பு!

'காலைக்கும்—மாலைக்கும் மத்தியில் 'மதியப் பதிப்பு' ஒன்றுகூடப் போடலாம் போலிருக்கிறது!

'நீர் மேல் எழுத்து' என்பார்களல்லவா—அப்படிப் போய்க் கொண்டிருக்கிறது அரசியல் உலகம்!

'இது முதல் தகவல்தானே—அடுத்து என்ன வருகிறது என்று பார்ப்போம்' என்று சாவகாசமாக எதையும் இலேசாக எடுத்துக்கொள்ளும் 'மனப் பக்குவம்' மக்களிடையே வளர்ந்து வருகிறது!

அது அவர்களுடைய தவறும் இல்லை! 'புலி வருகிறது—புலி வருகிறது' என்று, ஆட்டுக்காரச் சிறுவன் கிராமத்துக்காரர்களைப் பரிசோதித்த கதையாக இந்த அரசியல்வாதிகள், நாட்டு மக்களைப் பரிசோதித்துக்கொண்டு இருக்கிருர்கள்!

இந்தியாவைப் பொறுத்தவரையில், இப்படித் திடீர் திடீரென்று 'கதை'கள் உருவாவதற்குக் காரணம், காங்கிரசுதான்!

தமிழகம் போன்ற ஓரிரு மாநிலங்களைத் தவிர, தோற்ற—ஜெயித்த எல்லா இடங்களிலும் அவர்கள் தங்கள் 'கைவரிசை'யைக் காட்டிக்கொண்டுதானே இருக்கிருர்கள்!

மணிப்பூர்—பாண்டிச்சேரி—பீகார்—வங்காளம்—மத்தியப் பிரதேசம்—இராஜஸ்தான்—உத்தரப் பிரதேசம்—அரியானு—இப்படி, எங்கிருந்து வந்த புதுப் புதுத் திருப்பங்களை வேண்டுமானுலும் எடுத்து அலசிப் பாருங்கள்—அனைத்துக்கும் பின்னல் அனைத்திந்தியக் காங்கிரசுதான் இருக்கும்!

தமிழகத்திலும் இப்படிப்பட்ட 'திடீர்ச் செய்திகள்' இல்லையே—என்றுதான், இங்குள்ள காங்கிரசுக்காரர்கள் கவலைப்படுகிருர்கள் போலிருக்கிறது!

அந்த 'அவஸ்தை'களையெல்லாம் உருவாக்குபவர்களுக்கு, இந்த அமைதி ஒத்துக்கொள்ளாதுதான்!

போகிற இரயிலையே பார்த்துக்கொண்டிருப்பதனல்தான்—இருப்பது நிற்கிற இரயில்தான் என்ருலும்—'போய் வருகிறேன் - போய் வருகிறேன்' என்று கூறுகிருர்கள்!

குழப்பத்தை விதைத்து—குழப்பத்தை அறுத்து—குழப்பத்தைக் கொள்முதல் செய்து—குழப்பத்திலேயே அரசியல் வாழ்க்கையை நடத்துபவர்களுக்கு, இங்குள்ள 'அமைதி' - 'தெளிவு' என்னவோபோல்தான் இருக்கும்!

—எஸ். ஆர்.

நம்நாடு

ஆசிரியர்: இரா.செழியன்

திருவள்ளுவராண்டு 1998 புரட்டாசி 20 (6—10—67) வெள்ளி

பக்தவத்சலம் அரசியல் புராணம்

[1]

பல ஆண்டுக்காலமாகவோ சில ஆண்டுக்காலமாகவோ அமைச்சர் பதவியிலிருந்து வந்தவர்கள், அப்பதவி பறிக்கப்பட்டு விட்ட நிலையில் அவர்கள் அடைந்திடக்கூடிய வேதனையின் அளவும் தரமும் எப்படி இருந்திடக்கூடும் என்பதை அறிந்துகொள்ள விரும்பாதவர் இருக்கமுடியாது. அதுபற்றிய உண்மையை உள்ளது உள்ளவாறு தெரிந்துகொள்ள விரும்புகின்றவர் அனைவரையும், முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலனார் அவர்களும், அவருடைய சகலர் அழகேசனார் அவர்களும், நாள் தவறாமல் கழக ஆட்சியின்மீது வீசிவருகின்ற வசைமொழிகளையும், பழிச்சொற்களையும் ஒருமுறையாவது படித்துப் பார்க்கும்படி, கரங்கூப்பித் தாழ்மையாக விரும்பி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

தேர்தல் முடிவு வெளிவந்ததும், 'தமிழக ஆட்சிப் பொறுப்பை கழகம்தான் ஏற்றுக்கொள்ளப் போகிறது' என்பது உறுதியானதும் 'தமிழகத்தில் விஷக்கிருமிகள் பரவிவிட்டன' எனக் கூறியதன் மூலம், தமது அரசியல் கயமையை ஒளிவுமறைவில்லாமல் வெளிப்படுத்திக் கொண்டார் மீஞ்சூர் பெரிய குடிமகனார்!

"இவ்வாறு, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்ற கழகத்தைக் குறித்து, வயதில் மூத்தவர் பேசலாமா?' என்ற கேள்வி, பற்பல இடங்களிலிருந்தும் கிளம்பியது. இக்கேள்விக் கணைகளைத் தாங்கிக்கொள்ள முடியாமல், தமது கூற்றுக்கு விளக்கம் என எதை எதையோ கூறி, பதவி இழந்ததால் தமக்கு ஏற்பட்டு விட்ட அதிர்ச்சி—ஆத்திரம்—ஆயாசம் ஆகிய அனைத்து உணர்ச்சிகளையும் தமிழக மக்கள் அறிந்துகொள்ளச் செய்தார்—காலஞ்சென்ற நாசரத்பேட்டையாரின் மருகர்!

ஆனால் இன்றோ, தமது சகலர் பக்தவத்சலனார், 'ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கழகத்தைத்தான், 'விஷக்கிருமிகள்' என அன்று குறிப்பிட்டார்' என்ற உண்மையை, அழகேசனார் அவர்கள் அழுத்தந்திருத்தமாகப் பறைசாற்றி இருப்பதன்மூலம் உறுதிசெய்திருப்பதுடன், அவ்வாறு அன்று கூறிய—திறந்துகிடக்கும் தம் சகலரின் வாய்க்குப் போடுவதற்கு சர்க்கரை இல்லையே என்ற தமக்குள்ள பெரும் ஏக்கத்தையும் அதே அழகேசனார் அம்பலப்படுத்திக் கொண்டிருக்கின்றார்!

இதற்கு முன்பெல்லாம் நடைபெற்றிருப்பதுபோல், இன்று தனி நபர்களுக்குள்ளாக ஏற்படுகின்ற அடிதடிகளையும், குத்து வெட்டுகளையும் மிகப் பெரும் நிகழ்ச்சிகளாகச் சித்தரித்துக் காட்டி, கழக ஆட்சியில் சட்டம்—ஒழுங்கு சரிந்துபோய்விட்டது; சீர் குலைந்துவிட்டது' என்றெல்லாம் ஊளையிட்டவண்ணம் இருந்து வருகின்றார் பக்தவத்சலனார்!

இவ்வாறு ஊளையிட்டுவருவதில், 'வழிகாட்டி யார்—பின்பற்றுகின்றவர் எவர்' என்று பேதப்படுத்திப் பார்க்கமுடியாத அளவுக்கு, காமராசர்—பக்தவத்சலனார்—அழகேசன் ஆகிய தமிழக மும்மூர்த்திகளிடை பெரும் போட்டி இருந்துவருகிறது.

இம்மும்மூர்த்திகளின் பொய்மைக்கு, கன்னத்தில் அறைந்தது போல் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுதான் வருகின்றன. கழக ஆட்சியை, எதையாவது குற்றஞ்சாட்டிக் கண்டித்துக்கொண்டே இருப்பதுதான், 'வேகமாகச் சரிந்து வருகின்ற காங்கிரசுக் கட்சியைவிட்டு, இப்பொழுது இருக்கின்ற சிலரும் வெளியேறிவிடாமல் தடுத்து நிறுத்துவதற்கு ஏற்ற வழியாகும்' எனத் தீர்மானித்திருக்கின்ற மும்மூர்த்திகளிடம், மக்களாட்சி முறையில் ஓர் எதிர்க்கட்சி செயல்பட்டு வரவேண்டிய சிறந்த முறையை எதிர்பார்க்க முடியுமா? எதிர்பார்ப்பது அறிவுடைமையாகுமா?

பொதுவாக, தமிழகக் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த மும்மூர்த்திகளுக்கு—அதிலும் குறிப்பாக முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலனாருக்கு—கீழ்ப்பாக்கம் அரசினர் 'மாளிகை'யைக் குடியிருப்பாக அமைத்துக்கொள்ள வேண்டிய அளவுக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டுவிட்டிருக்கிறதோ எனக் கவலைகொள்ள வேண்டிய அளவுக்கு கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. பல ஆண்டுக் காலம் அமைச்சராகவும், சில ஆண்டுக்காலம் முதலமைச்சராகவும் இருந்த முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலனார்—தமது குளறல் மூலம்—தமிழ் மக்கள் கைகொட்டிச் சிரிக்கத்தக்க கேலிச் சித்திரமாக மாறிவிட்டிருப்பதைக் காணப் பரிதாபப்படுகிறோம்!

'காங்கிரசு வழக்குரைஞர்கள் சங்கம்' என்ற பெயரால் ஓர் அமைப்பு, தலைநகரத்தில் துவக்கப்பட்டிருக்கிறது; அவ்வமைப்பின் துவக்க விழாவில் முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலனார் அவர்களும், கலந்துகொண்டு, நாவசைத்திருக்கின்றார்.

அந்த நாவசைப்பில், தாமே உண்மையானது என்று உறுதியாக நம்பாத—தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவைப் பற்றிய ஒரு 'கற்பனைச் செய்தி'யைக் குறிப்பிட்டிருக்கின்றார். அக் கற்பனை நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்துக்கொண்டு, அறிஞர் அண்ணா மீது தாம் கற்பிக்க விரும்பிய களங்கத்தை, கண்—காது—மூக்கு வைத்துக் கற்பித்திருக்கின்றார், முன்னாள் முதலமைச்சர்:—

"சமீபத்தில் ஒரு மாவட்டத்துக்குப் போயிருந்தேன். தமிழகத்தைப் பொறுத்தவரை, நீதி பரிபாலனத்தில் உயர்ந்து விளங்கிவருகிறது. முன்பு இருந்த அரசு (காங்கிரசு ஆட்சி)கூட அதில் அதிக நம்பிக்கை வைத்திருந்தது. நமது நீதி பரிபாலனத்தை, சுப்ரீம் கோர்ட்கூடப் பாராட்டியிருக்கிறது.

"இப்பொழுது அதற்குக்கூடப் பாதகம் ஏற்படும்போல இருக்கிறது. நான் சென்றிருந்த அந்த மாவட்டத்தில், மாவட்ட நீதிபதி, முதலமைச்சரை, பகல் உணவுக்கு அழைத்தார். மாலை 6½ மணிக்கு சாப்பாட்டை எல்லாம் முடித்துக்கொண்டு வந்தாராம்; அதுவரை எல்லோரும் காத்து இருந்தார்களாம்."

இச்செய்தியைக் கூறிய பக்தவத்சலனார், இதை உண்மை என நம்பித்தான் கூறியிருக்க வேண்டும்—என்றுதான் எவரும் முடிவு கட்டுவர்; ஆனால், உண்மை அதுவல்ல. பக்தவத்சலனார் கூறியிருப்பதாவது:—

"இது உண்மையாகவும் இருக்கலாம்; பொய்யாகவும் இருக்கலாம்; ஆனால், இந்த நிலைமை தமிழகத்தில் உருவாகி இருக்கிறது."

முதலமைச்சர் அறிஞர் அண்ணா பற்றி, தாம் வெளிப்படுத்திய நிகழ்ச்சி, **'உண்மையாகவும் இருக்கலாம்—பொய்யாகவும் இருக்கலாம்'** என்கிறார் பக்தவத்சலனார்.

'நிகழ்ச்சி உண்மையானதுதான்' எனத் தம்மாலேயே உறுதியாக நம்ப முடியாததை, தாம் கூறினாலும் தமிழக மக்கள் உண்மையானது என நம்பமாட்டார்களே என்ற அறிவு ஏன் முன்னாள் முதலமைச்சருக்கு, இல்லாமற்போய்விட்டது? தம்மாலேயே நம்ப முடியாத நிகழ்ச்சியை, தமிழ் மக்கள் நம்ப வேண்டும் என்று, ஏன் பக்தவத்சலனார் எதிர்பார்க்க வேண்டும்?

'கழக ஆட்சியில், நீதி—நிர்வாகத்துக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது' என்ற பொய்யைப் பரப்பவேண்டும் என்பது, மீஞ்சூர் முதியவரின் நச்சு நினைப்பு! அந்த நச்சு நினைப்பை, மீஞ்சூரார் மூடி மறைத்திருக்கவில்லை; தமது கெடு மதியை, **'இந்த நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கிறது'** எனக் குறிப்பிட்டிருப்பதன் மூலம், அவர், பறைசாற்றிக் கொண்டிருக்கின்றார்!

இந்த நச்சுக் கருத்தைப் பரப்பவே, முதலமைச்சர் அண்ணா பற்றிய பொய் நிகழ்ச்சியைக் கற்பனையாக உருவாக்கியுள்ளார், பக்தவத்சலனார் அவர்கள். அவருடைய பொய்யை நம்புகின்றவர் எவரும் தமிழகத்தில் இன்று இல்லை என்பதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இன்றைய நீதித்துறையைக் குறித்து, **'இந்த நிலைமை தமிழகத்தில் உருவாகி இருக்கிறது'** என, முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலனார் அவர்கள் வெளிப்படையாகக் கூறியிருப்பதன் வாயிலாக நீதித் துறைக்குக் களங்கம் கூறுகிறார்—மாசு கற்பிக்கின்றார்!

இதை விளக்கமாகக் கூறவேண்டுமானால், 'இன்றைய நீதித் துறையை, பக்தவத்சலனார் அவமதிக்கின்றார்' என்றுதான் கூற வேண்டும்.

—கா. க.

கடும் தாக்கு!

பெங்களூர், அக். 5—

"சிவ சேனை என்பது விஷக் கிருமி போன்றது! பாசிச சர்வாதிகாரத்தன்மை வாய்ந்தது!

"சிவ சேனை குறித்து நாம் வெட்கப்பட வேண்டும்!

"சிவ சேனை தொத்து வியாதி போன்றது—அது பரவி வருகிறது; அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது மத்திய அரசு, மாராட்டிர அரசு ஆகியவற்றின் பொறுப்பாகும்."

--எஸ். கே. பாட்டீல்

ஒரிசாவில் ஒரு புதிய 'சேனை'!

கட்டாக், அக். 1—

மகாராட்டிரத்தில் உள்ள 'சிவ சேனை' பாணியில் ஒரிசாவில் உருக்காலை நகரான ரூர்கேலாவில் 'உட்கல் சேனை' என்னும் புதிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டுவருவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

உருக்காலை வட்டாரத்தில் ஒரியா மக்களின் நலன்களைப் பாதுகாப்பதே அப்புதிய அமைப்பின் நோக்கமாகும்.

அச்சேனைக்கு உறுப்பினர்களைச் சேர்க்கும் வேலை ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டபோதிலும், அது இனிமேல்தான் முழு உருப்பெற வேண்டியுள்ளதாம்.

நடவாத காரியத்திற்கு ஆதரவு!

அண்மையில் கருநாடக மாநிலத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் மாநாடு ஒன்று நடந்தபொழுது, இந்தியைப் பாடமொழியாகக் கொண்ட கல்லூரிகள் துவக்கப்படுவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

'என்றைக்காவது' ஒருநாள், இப்படிப்பட்ட கல்லூரி தேவை என்று மாணவர்களால் உணரப்பட்டால், அப்பொழுது அதனை ஆதரிப்பது என்று மாநாடு 'பொதுப்படையாக' ஒப்புக்கொண்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

முக்கடல் கூடும் குமரி முனைக்குச் சிறப்புச் செய்க!

கோடைக்கானல்-கோத்தகிரியில் வளங்கூட்டுக

'பயணிகள் வசதிக்கு இந்த ஆண்டு ரூ. 25 இலட்சம் நிதியுதவி அவசியம்'--மத்திய அரசிடம் சத்தியவாணிமுத்து வேண்டுகோள்

29—9—67-ம் நாளன்று சிம்லாவில் நடைபெற்ற சுற்றுப் பயண வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில், தமிழக அரிசன நல—செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் ஆற்றிய உரை:—

"சுற்றுப்பயணத் தொழிலுக்கு நம் நாட்டில் மிக நல்ல எதிர்காலம் இருக்கிறது. இந்தக் கூட்டத்திலும் நல்ல பல யோசனைகள் கூறப்பட்டன; ஆயின் சில நண்பர்கள், தங்களுடைய வட்டார மொழியில் பேசிய காரணத்தினால், அவர்களது பேச்சின் சுவையை நாங்கள் அனுபவிக்கக்கூடிய வாய்ப்பில்லாமற் போய்விட்டது. நாங்கள் எங்கள் மொழியில் பேசி மற்றவர்களுக்குச் சங்கடம் உண்டாக்க விரும்பவில்லை.

சுற்றுப்பயணத் தொழில் தமிழகத்தில் செழிக்க வாய்ப்புக்கள் நிறைய உள்ளன; எழிலார்ந்த கடற்கரை — கோடைக்கானல் — உதகமண்டலம் — வால்பாறை போன்ற மனங்கவரும் மலைப் பகுதிகள் — கலையழகு நிரம்பிய கோயில்கள் — கருநாடக இசை—நடனக் கலை போன்றவற்றுடன், வெளிநாட்டுப் பயணிகளுக்கும் உள்நாட்டுப் பயணிகளுக்கும் நல்ல வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

பகுதி ஒன்று—பகுதி இரண்டு ஆகிய திட்டங்களுக்கு நியாயமான நிதி ஒதுக்கீடுகள் செய்யக் கூடிய மத்திய அரசின் ஒத்துழைப்போடு சுற்றுப்பயணத்தை வளர்க்க மாநில அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது; வருங்காலத்தில் சிறப்பாக முன்னேற எண்ணங் கொண்டுள்ளோம்.

நிதி வசதி இல்லாத காரணத்தினாலேயே, விரிவான பல திட்டங்கள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. அவற்றுக்கு நிதி வசதி உறுதி செய்யப்பட்டால், அவை விரைவாகச் செயல்

படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை.

மிகுந்த கவனம் பெற்றுள்ள மாமல்லபுரம் மேம்பாட்டுப் பணியில் மாநில அரசும், மத்திய அரசும் ஏற்கனவே ஈடுபட்டுள்ளன.

இயற்கை எழில் கொஞ்சும் இடமாகவும், நெஞ்சங்கவர் எழில் அழகு செய்யும் இடமாகவும் அமைந்துள்ள கோடைக்கானலை, பயணிகளுக்கு மிக விருப்பமான இடமாக மேம்பாடடையச் செய்வதில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள கோத்தகிரியையும், முக்கடல் கூடும் இடமாகவும் ஆதவன் உதயமாவதையும் மறைவதையும் காணக்கூடிய இடமாகவும் திகழும் கன்னியாகுமரியையும் மேம்படுத்தச் சிறந்த வாய்ப்புகள் உள்ளன. இவற்றை உரிய காலத்தில் மேம்படுத்தப் பெருந் திட்டங்கள் தீட்டப்படுவதோடு அவற்றை எந்தவகையிலும் பாதிக்காத முறையில்—பெருகிவரும் பயணிகளின் நன்மைக்காக உடனடியாக நிறைவேற்றப்படவேண்டிய வேலைத் திட்டங்களை வகுக்கலாம்; இதற்கு, மாநில அரசின் சொற்ப நிதி வசதிகளோடு தன்னுடைய நிதி வசதிகளையும் பயன்படுத்த மத்திய அரசு முன்வர வேண்டும். இந்த ஆண்டு குறைந்தபட்சம் ரூ. 25 இலட்சம் ஒதுக்கீட்டுக்காவது உறுதி செய்ய வேண்டும்.

தமிழகத்தில் சுற்றுலா மாளிகைகள் நல்ல முறையில் இலாபகரமாக இயங்கிவருகின்றன. இந்தியச் சுற்றுப்பயண வளர்ச்சிக் கழகம் மாநில அரசின் ஒத்துழைப்போடு பெரியதோர் ஓட்டலைக் கட்டுவதற்கான இடத்தை நாங்கள் தேர்ந்தெடுத்துவிட்டோம்.

மதுரை மீனாட்சி கோயிலில், ஒலி—ஒளிக் காட்சிக்கும் நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம்.

பயணிகளுக்குப் போக்குவரத்து வசதிகள் செய்து தருவதைப் பொறுத்தவரையில், வசதியான வண்டிகளை அரசே விடுவது பற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

மதுரைக்கும்—தேக்கடிக்கும் இடையே அரசு பேருந்து வண்டி விடலாம் என்று கேரளத்து நண்பர் தெரிவித்த யோசனையை நான் வரவேற்கிறேன்.

சுற்றுப்பயண—செய்தித் துறையை முற்றிலும் திருத்தியமைக்கும் எண்ணம் இருக்கிறது; அது விரைவில் நிறைவேற்றப்படும்.

இந்த நாட்டில் சுற்றுப்பயணத் தொழில் வளர்ச்சியடையவும், இலட்சக்கணக்கான வெளிநாட்

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழக மீன்வளத் துறையின் எதிர்காலத் திட்டங்கள்

அமைச்சர் கோவிந்தசாமி விளக்கவுரை

30—10—67 அன்று சென்னையில் இராஜாஜி மன்றத்தில் தமிழக மீன் வள ஆலோசனை வாரிய கூட்டத்தைத் துவக்கிவைத்து மீன் வள அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் ஆற்றிய உரை :—

"மீன் தொழில் வளர்ச்சிக்கு முக்கியத் தேவையானது மீன் பிடி படகுகளை இயந்திரமாக்குவதும், செயற்கைப் பட்டு நூல் வலையின் பயனைப் பரவச் செய்வதுமாகும்.

சென்ற மூன்று திட்டங்களில் ரூ. 31.34 இலட்சம்; ரூ. 75.30 இலட்சம்; ரூ. 257.27 இலட்சம் மூலதனத்தில் மீன் பிடித் துறைமுகங்கள், கல்லுடைப்பு, பதனிடும் நிலையங்கள் அமைத்தல், போக்குவரத்து, விற்பனை ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

நான்காம் திட்ட தற்காலிக மூலதனமான ரூ. 788 இலட்சத்துக்குப் பதிலாக 1966-67-ல் ரூ. 108.09 இலட்சம் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதுடன், 1967–68-ல் ரூ. 100.27 இலட்சம் செலவிட கீழ்க்கண்டவாறு திட்டம் உள்ளன.

மத்திய உதவிபெறும் திட்டத்தின் கீழ் நான்காம் திட்ட காலத்தில் 1,000 இயந்திரப் படகுகள் கட்டி படகுகளின் விலையில் 25 சதவிகிதமும, எஞ்சினின் விலையில் 50 சதவிகிதமும் மானியம் தரவும், மானியம் போக இருக்கின்ற மீதித் தொகையை 60 தவணைகளில் வசூலிக்கவும் எண்ணமுள்ளது.

1967–68-ல் 170 படகுகள் கட்டவும், படகு கட்டும் தளங்களுக்கு வேண்டிய சாமான்கள், இயந்திரங்களை வைக்க ஒரு கிடங்கு நிறுவவும் திட்டங்கள் உள்ளன.

மேற்படி தளங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் கூலி விகிதங்களை உயர்த்தவும், மற்றச் சலுகைகளை வழங்கவும் அரசு அனுமதித்துள்ளது.

மீனவர்களுக்கு மீன் பிடித் தளவாடங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் நான்காம் திட்ட காலத்தில் படகுகளுடன் 1,25,000 கிலோகிராம் பட்டு நூல் வழங்கவும்; எஞ்சின்கள், மோட்டார்கள் 50-ம், மானிய விலையில் 3,75,000 கிலோகிராம் பட்டு நூல் வழங்கவும் ரூ. 20 இலட்சம் செலவில் ஒரு வலை பின்னும் தொழிற்சாலை நிறுவவும் திட்டங்கள் உள்ளன.

மீனவர்களுக்கு வழங்கப்படும் பட்டு நூல் விலையில் 25 சதவிகித மானியம் தரப்படுவதுடன் இத்தொகை இரண்டாண்டுகளில் 18 தவணைகளில் வசூலிக்கப்படுகிறது.

இந்திய — நார்வே திட்டத்தின் கீழும், பிற திட்டத்தின் கீழும் 1967--68-ல் வழங்கப்படவிருக்கும் இயந்திரப் படகுகளுடன் 22,500 கிலோகிராம் பட்டு நூல் தரப்படும். மேலும், 20 சதவிகிதம் சலுகையில் 1967-68-ல் ரூ. 50,000 மதிப்புள்ள பருத்தி நூல் வழங்கப்பட இருக்கிறது.

நான்காம் திட்ட காலத்தில் 30 கோடி மீன் குஞ்சுகளையும், 40 கோடி நுண் குஞ்சுகளையும் உற்பத்தி செய்யத் திட்டம் உள்ளது.

1967-68-ல் 6 கோடி மீன் குஞ்சுகளும், 8 கோடி நுண் குஞ்சுகளும் உற்பத்தி செய்யும் வேலை தொடர்ந்து நடைபெறும்.

விரைந்து பெருகும் மீன் குஞ்சுத் தேவைகளை நிறைவு செய்வதற்கு சாத்தனூர், கிருஷ்ணகிரி, மணிமுத்தாறு முதலிய இடங்களில், 'நர்சரி'கள்—வளர்ப்புக் குளங்கள் அடங்கிய மீன் பண்ணைகள் கட்டப்படும்.

ரூ. 40,700 செலவில் 1967-68-ல் பில்லூர் நீர்த்தேக்க மேம்பாட்டு வேலை தொடங்க உத்தேசமுள்ளது.

பூங்கார் மீன் குஞ்சுப் பண்ணை —கோமுகி, வீடூர் மீன் பண்ணை வேலைகள்—பொதுப்பணித் துறையால் 1966-67-ல் எடுத்துக் கொள்ளப்படாததால், 1967-68-ல் மேற்கொள்ளப்பட்டன.

ஊராட்சிகளின் மீன் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பட்டு நூல் மிதவைகளை வழங்கவும், மீன் அங்காடிகளை வளர்ச்சியுறச் செய்யவும், மீன் வளர்ப்புக் குளங்களைப் புதுப்பிக்கவும், நர்சரிகளை அமைத்துப் பேணி வரவும், மீன் குஞ்சுகளை வழங்கவும் அரசு ஒப்புதல் தந்துள்ளது.

இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றிப்புகள்—கடல் மீன் பிடி கிராமத்தை உள்ளிட்ட கடலோர வட்டாரங்கள் — மீன் வளர்ப்புக்கு நல்ல வாய்ப்புள்ள உள்நாட்டு வட்டாரங்கள் — குறைவான வாய்ப்புள்ள உள்நாட்டு வட்டாரங்கள்—வறண்ட வட்டாரங்கள் என நான்குவகையாகப் பிரிக்கப்பட்டு முறையே ரூ. 33.000; ரூ. 30,250; ரூ. 14,500; ரூ. 100 நிதி உதவி வழங்கப்படுகிறது. இதற்காக 1967-68-ல் ரூ. 6 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மீன் குஞ்சுகள் பெறுவதில் தன்னிறைவு பெற பல பஞ்சாயத்துக்கள், 2/3 பாகம் தமிழக அரசின் உதவியுடன் மீன் நர்சரிகளைக் கட்டியுள்ளன.

நான்காம் திட்டத்தில் 10 பனிப் பொறிகளை அமைக்க எண்ணமுள்ளது. இத்துடன், மூன்றும் திட்டத்தில் தொடங்கிய பனிப் பொறி — குளிர் அறை — உறையவைப்பு நிலைய வேலை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

1967—68-ல் 15 இடங்களில் பனிப் பொறி—குளிர்கலன்—உறையவைப்பு நிலையம் போன்றவைகளின் அமைப்பு வேலை மேற்கொள்ளப்படும்.

மீனவர்கட்கும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், வாடகை, தவணைக் கொள்முதல் முறையில் வழங்க 30 ஊர்திகள் வாங்க நான்காம் திட்டத்தில் இடமுள்ளது.

மாநில வர்த்தகக் குழு மூலம், அங்கேரியிலிருந்து குளிர் அறை வசதிகள் கொண்ட 3 ஊர்திகள் 1967—68-ல் இறக்குமதி செய்யப்பட்டன.

நான்காம் திட்ட காலத்தில் ஒரு மொத்த விற்பனை அங்காடி அமைக்கவும், 50 நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சிக் கழகங்களுக்கு மீன் அங்காடிகளின் அமைப்பு—வளர்ச்சிக்கு மானியம் வழங்க எண்ணமுள்ளது.

அங்காடிகளுக்காகும் செலவில் 50 சதவிகிதம் மானியமாகும். மானியம் வழங்க 1967—68-ல் ரூ. 40,000 நிதி ஒதுக்கியுள்ளது. மீனவர்களுக்கும், மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ. 25 இலட்சம் வழங்க உத்தேசமுள்ளது.

1967—68-ல், கலன்கள்—கருவிகள் வாங்கவும், முன் கடன்களைத் தீர்க்கவும், மீன் விற்பனை யூனியன்களுக்கு நடைமுறைச் செலவு மூலதனமாகவும் வழங்கவும் ரூ. [illegible]50 இலட்சம் கடன் தரத் திட்டமுள்ளது.

நான்காம் திட்டத்தில் தமிழகத்திலுள்ள 3 கழிமுகங்களை வளர்ச்சியுறச் செய்யும் எண்ணமுள்ளது.

1967—68-ல் பறங்கிப்பேட்டை கழிமுகத்தை வளர்ச்சியுறச் செய்து ரூ. 45 இலட்சம் செலவில் மீன் வளர்ப்புக் குளங்களை நிறுவத் திட்டமுள்ளது.

நான்காம் திட்டத்தில் 2,500 மீனவர்களுக்கும், 100 மீன்துறை அலுவலர்களுக்கும், 25 அதிகாரிகளுக்கும் பயிற்சியளிக்கத் திட்டம் உள்ளது. மேலும் தவளை வளர்ப்புக்குரிய ஆராய்ச்சி யூனிட்டை அமைக்க எண்ணமுள்ளது.

நான்காம் திட்டத்தில் படகுத் தளங்களையும், பராமரிப்புக் கேந்திரங்களையும் பலப்படுத்தத் திட்டம் உள்ளது. மேலும் விரைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட 10 சாலைகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.



கடலூர் மீன்பிடித் துறைமுக இரண்டாம் படி வேலையும், விரைவுத் திட்டத்தின் கீழ் இராமேசுவரத்தில் படகுத்துறை அமைப்பு வேலையும் தொடரப்பட்டுள்ளது.

மண்டபத்தில் படகுத் துறை அமைப்பு வேலையும், குளச்சலில் பூர்வாங்க வேலையும் 1967—68-ல் முற்றுப்பெறலாம். தூத்துக்குடித் துறைமுகத்தை விரிவுபடுத்தி அதில் மீன்பிடித் துறைமுகத்தை ரூ. 193 இலட்சம் செலவில் அமைக்க மதிப்பீடு திருத்தப்பட்டு வருகிறது; விரைவில் மத்திய அரசின் ஒப்புதல் இதற்குக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இராயபுரம் மீன்பிடித் துறைமுகத்தைப் பொறுத்தமட்டில், ஒரு எண்ணெய்த் துறை உள்ளிட்ட மீன்பிடித் துறைமுகம், வட பகுதியில் அமைப்பதற்காகச் சென்னைத் துறைமுகத் துறையினர், திட்ட அறிக்கை தயாரித்துள்ளனர். திட்ட அறிக்கை இந்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது; இது ஒரு முத்திய திட்டமாகும்.

ஜப்பானிய 'யான்மார்' இயந்திரங்களின் தேவையை நிறைவு செய்ய ஜப்பானியக் கூட்டுறவுடன் ஓர் உற்பத்தித் தொழிற்சாலை ஏற்படுத்தத் திட்டம் வகுத்து அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுவருகின்றன. மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படும் மீன்பிடி டிராலர்கள் 1968-ல் வந்தவுடன், ஆழ்கடல் மீன் பிடிப்பு வேலைகள் துவக்கப்படும்.

படித்தோர் ஈடுபட்டால் ஓட்டல் தொழிலின் தரம் உயரும்

கலப்படத்தைத் தவிர்ப்பதற்கு 'முத்திரை முறை' ஏற்படுத்திக்கொள்க!

ஓட்டல் உரிமையாளரிடை அண்ணா--மதியழகன் ஆய்வுரை

சென்னை, அக். 5—

எழும்பூர் அசோகா ஓட்டலில் ஓட்டல் அதிபர்கள் சங்க ஆண்டு விழா, சங்கத் தலைவர் திரு. செயராமன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா, உணவமைச்சர் கே. ஏ. மதியழகன், வேளாண்மை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, சட்டமன்ற சுதந்தராக் கட்சி உறுப்பினர் எச். வி. ஹண்டே ஆகியோர் கலந்துகொண்டனர்.

கே. ஏ. மதியழகன்

உணவமைச்சர் கே. ஏ. மதியழகன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"விற்பனை வரியைக் குறைக்கச் சொல்கிருர்கள். அரசாங்கம் என்பது கடைகளில் பேரம் பேசுவது போன்ற இடமல்ல—வியாபாரச் சந்தையல்ல—மக்களும் அரசாங்கமும் ஒன்றுதான்.

விற்பனை வரியால் எந்த ஓட்டலும் பாதிக்கப்படாது; 'ரூ. 10 ஆயிரம் வருமானமுள்ளவர்களுக்கு விற்பனை வரி கிடையாது' என்று சட்டம் போட்டுள்ளோம். முந்தைய அரசாங்கத்தில் மூன்று சதவிகிதம் வரி கட்டியவர்கள் இப்போது ஒன்றே முக்கால் சதவிகிதம்தான் கட்டுகிருர்கள் அதுவும் உணவுப் பொருள்கள் மீது வரியில்லை.

அரசியலுக்காக-- அதுவும் எதிர்க்கட்சியிலிருப்பவர்கள்—'விற்பனை வரி கூடாது' என்று பேசலாமே தவிர, உள்ளத்தில் கை வைத்து உண்மையிலேயே 'கூடாது' என்று சொல்ல முடியாது.

முன்பு, 'சர்க்கரை காணுது' என்று கேட்டபோது—தனியாக வரவழைத்து—ஐந்து சதவிகிதம் கூடுதலாக எல்லா ஓட்டல்களுக்கும் கொடுத்தோம். ஆதலால் முடிந்தால் உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவோம். 'விற்பனை வரி போடுவது கூடாது' என்று நீங்கள் கேட்பது சரியல்ல."

முதலமைச்சர் அண்ணா

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"பொதுவாக வியாபாரத் துறையில் தனித் தனியாக வந்து கோரிக்கைகளைச் சொல்வதைவிட, ஓர் அமைப்பின் மூலம் எடுத்துச் சொல்வது நல்லது; அரசாங்கமும் அதனை அக்கறையுடன் கவனிக்கும்.

10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிடப் படித்தவர்கள் ஓட்டல் நடத்தும் தொழிலில் அதிகமாக ஈடுபட்டுள்ளனர். பி.ஏ. படித்துவிட்டு ஏதேனும் ஓர் அரசாங்க அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றிஞல் போதுமென்றில்லாமல், பட்டம் பெற்ற இளைஞர்கள் சிலர் ஓட்டல் நடத்துவது உண்மையிலேயே பாராட்டுக்குரியதாகும்.

சாப்பிட வருவோரை, 'வாருங்கள்' என்று குழைவுடன் அழைக்கும் தன்மையும், 'என்ன வேண்டும்' என்று பரிவோடு கேட்கின்ற தன்மையும் நல்ல விதமாக அமைந்தால், ஓட்டல் தொழில் நேர்த்தியாக வளரும்.

சிறு ஓட்டல்காரர்கள் கலப்படம் செய்யாமல் திருந்தவேண்டும்.

'கலப்படம் எங்கிருந்து தோன்றுகிறது என்பதை முதலில் அறிய வேண்டும்' என்ருர்கள்; அதை அறிய ஒரே வழி இதுதான்—எல்லா ஓட்டல்களுக்கும் உங்கள் சங்கத்தின் முத்திரை இருக்கவேண்டும்; உங்கள் முத்திரை இருந்தால்தான், 'இந்த ஓட்டல் கலப்பட ஓட்டல்' என்று பிறர் கூறும்பொழுது, 'இல்லை, இல்லை; இங்கு தமிழக ஓட்டல் உரிமையாளர் சங்க முத்திரையிருக்கிறது. ஆதலால் அவ்வாறு தவறு செய்யமாட்டாது' என்று கூறமுடியும். இல்லாவிட்டால், ஈரோடு மஞ்சள் கடைக்காரனிடம் கேட்க, அவன், 'நான் ஒழுங்காகத்தான் ஓட்டலுக்கு மஞ்சள் கொடுக்கிறேன்; கொடுக்கும் இடத்தில் அவர்கள்தான் ஏதாவது செய்துவிடுகிருர்கள்' என்று சொல்லுவதை நாங்கள் நம்பத்தான் வேண்டியிருக்கும். ஆதலால், உங்கள் தொழிலுக்கு நீங்களே ஒரு கட்டுத் திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டும்."

தென் சென்னைத் தொகுதி இடைத் தேர்தல் :

செந்தமிழ் அன்னை வீரப் பண் பாட...!

"நடைபெறப் போகும் தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியின் இடைத் தேர்தல் முடிவு—இந்திய அரசியலில் மாற்றத்தையோ, இந்திரா காந்தி அமைச்சரவையை மாற்றுகின்ற நிலையையோ ஏற்படுத்திவிடப் போவதில்லை! இருந்தாலும், ஏராளமான வாக்குகள் அதிகம் பெற்ற தென் சென்னைத் தொகுதி நமது கோட்டையாகும்!

"காமராசர்கூட டில்லியில், 'தென் சென்னைத் தொகுதி இடைத் தேர்தல் வரட்டும்; நாங்கள் வெற்றிபெற்றுக் காட்டுகிருேம்' என்று கூறிவருகிருராம்; 'அது எப்படி முடியும்?' என்று கேட்போருக்கு, 'தமிழ்நாட்டு மக்கள் அவதியுறுவதாலும், 'தி. மு. க.-வுக்கு ஓட்டுப் போட்டு விட்டோமே' என்று வருந்துவதாலும், காங்கிரசு வெற்றி பெறப்போகிறது' என்று கூறிவருகிருராம்!

"இப்படித்தான் சென்ற தேர்தலில், 'படுத்துக்கொண்டே ஜெயிப்பேன்' என்று நம்பிக்கையோடு சொன்ஞர்! முடிவு—நீங்கள் அறிந்ததுதான்! அதுபோலத்தான் மீண்டும் அவரது நம்பிக்கை இருக்கும்!

"தென் சென்னையில் போட்டியிடும் கழக வேட்பாளர் முரசொலி மாறன். எம்.ஏ. பட்டம் பெற்ற இளைஞர்; எழுத்தில் வல்லவர்; செயலில் நல்லவர்.

"'இதனை இதனுல் இவன் முடிக்கும் என்றுய்ந்து, அதனை அவன் கண்விடல்' என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, இந்தியை எதிர்க்க – தமிழுக்கும் தமிழினத்திற்கும் பெருமை தேடித் தர – டில்லியிலே செந்தமிழ் அன்னை வீரப் பண் பாட– மாறனைத் தேர்ந்தெடுப்பீர்!"

---அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்

(சென்னை 74-வது வட்ட கூட்டத்தில்)

மதுரை மாவட்டத்தில் புதிய வட்டங்கள்

அமைச்சர் கே. ஏ. மதியழகன் துவக்கிவைத்தார்

மதுரை, அக். 5—

உத்தமபாளையம், வேடச்சந்தூர், உசிலம்பட்டி, மதுரை தெற்கு ஆகிய பகுதிகள் தனி வட்டங்களாக ஆக்கப்பட்டுள்ளன.

இப்புதிய வட்டங்கள் அக்டோபர் முதல் நாளிலிருந்து செயல்படத் துவங்கியுள்ளன.

உத்தமபாளையம், உசிலம்பட்டி ஆகிய பகுதிகளை புதிய வட்டங்களாகத் துவக்கும் விழாவில் கலந்துகொண்டு தமிழக உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், அவ்வட்டங்களைத் துவக்கி வைத்தார்.

புதிய உத்தமபாளையம் வட்டத்தில் 69 ஊராட்சி ஒன்றியங்களும், இரண்டு நகராட்சிகளும் இருக்கும்.

உசிலம்பட்டி வட்டத்தில் 98 கிராமங்கள் இருக்கும்.

ஆட்டம் என்ன சொல்லுவேன்!

முதுகுக்கும் — முகத்துக்கும், பிறப்பில், 'பார்வைத் தொடர்பு' அமைந்திருக்கும் நிலை வியப்பாகத்தான் இருக்கிறது!

சொந்தக் 'கதை'யையே கவனிக்கமுடியாத காங்கிரசு, கல்கத்தாவில், வேறோர் 'கதை'யை உருவாக்கிக் கொண்டிருக்கிறது!

மத்திய ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரியில், காங்கிரசு 'ஆட்டம்' போடுகிறது!

ஆனால், வங்காள மாநிலத்தில், அஜாய் முகர்ஜியின் ஆட்சிக்கு 'ஆட்ட'த்தைக் கொடுக்கிறது அனைத்திந்தியக் காங்கிரசு!

சில கிழமைகளுக்கு முன், பாண்டி அமைச்சரவையில் தோன்றிய மயக்க நிலை, இன்னும் தெளிந்தபாடில்லை! மேலும் மேலும் குழப்பத்தைத்தான் கொடுக்கிறது! மயக்கத்தில் செய்யும் வேலையின் மகத்துவமே அதுதானே!

'பாண்டி' நிலைமைகளைப் பற்றி எழுதும்போதெல்லாம், 'மயக்கம்' என்ற சொல்லை வைத்தே அங்குள்ள அரசியல் நடப்புகளை விவரிப்பது சில காங்கிரசுக்காரர்களுக்குக் கோபத்தைக் கொடுத்திருந்தால், அவர்கள் இனியேனும் தங்கள் குணத்தை மாற்றிக் கொண்டு,

Gongress Politics In This State Is FLUID

என்று இன்றைய 'இந்து' இதழில் அதன் புதுவை நிருபர் தந்திருக்கும் தகவலைப் படித்துப் பார்க்க வேண்டும்.

"பாண்டி காங்கிரசின் குழப்பத்துக்கெல்லாம்அடிப்படைக் காரணமே, 'பெர்மிட்' பற்றிய தகராறுகள்தான்" என்கிறார், 'இந்து' செய்தியாளர்!

காந்தியார் இன்னும் ஒரு முறை சாந்தி பெறட்டும்—நூறுவது பிறந்த ஆண்டு அல்லவா—எனவே, இன்னும் சற்று அதிகப்படி சிறப்பு!

குறிப்பிட்ட ஒரு தனி நபரின் 'மது பெர்மிட்' பற்றிய துறையில் மரைக்காயரின் போக்கு பிடிக்காததனால், உடன் அவரை வெளியே அனுப்பும் வேலை துவங்கியிருக்கிறது!

அந்நிய மது வகைகளில் 60 சதவிகித வெட்டினை அமுலாக்கியிருந்தார்— முன்பிருந்த வெங்கடசுப்பா ரெட்டியார்; அதே ரெட்டியாரின் ஆட்கள் சிலர், 'ஆளுவது வேறொருவர் தானே?' என்ற அடிப்படையில், 60 சதவிகித வெட்டினை நீக்கிவிடக் கோரியிருக்கின்றனர்—மரைக்காயர் மறுத்திருக்கிறார்—குழப்பம் தோன்றியிருக்கிறது!

பின்னால் ஏற்பட்டிருக்கிற நடப்புகளெல்லாம், ஒரே 'மயக்கந்தான்!

★ "வெங்கடசுப்பா ரெட்டியார் சட்டமன்றக் காங்கிரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்" என்றொரு செய்தி!

★ "தலைவரானால் என்ன—நான்தான் முதல்வர்" என்ற மரைக்காயரின் மறுப்பு!

★ "பொறுத்துக்கொள்ளுங்கள்; வந்துவிடுகிறேன்" என்ற காமராசரின் 'கட்டளை'!

★ "அய்யர் வரும்வரையிலா அமாவாசை காத்திருக்கும்?" என்ற போக்கில், இரண்டு முறை—அதுவும், இருக்கிற தலைவர் இல்லாமலே பாண்டி காங்கிரசுக் கட்சி கூடிய காட்சி!

★ "இது, சட்டத்துக்குப் புறம்பல்லவா? நியாயப்படி தவறல்லவா?" என்ற மரைக்காயரின் கேள்விக் கணைகள்!

இதுதான் பாண்டி நிலைமைகள்!

இதற்கிடையில், எதிர்க் கட்சி அமைப்புகளின் தலைவர் வி. சுப்பையா எழுப்பியிருக்கும் மற்றொரு சட்டப் பிரச்சினை, சூடும் சுவையுமாக மாறினாலும் மாறக்கூடும்!

கடந்த மார்ச் மாதத்தில் தன் மீது கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறுவதற்கு முன்பே—'மீசையில் மண் படவில்லை' என்று 'கீழே விழுந்த' வெங்கடசுப்பா ரெட்டியார்--தாமாகவே பதவி துறந்தார்; எனவே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு இன்னும் உயிர் இருக்கிறது" என்று சுட்டிக்காட்டுகிறார் சுப்பையா!

இவரது கருத்து ஏற்கப்பட்டால், 'வர இருக்கிறார்' எனக் கருதப்படும் வெங்கடசுப்பா ரெட்டியார், ஒரு தார்மீக எதிர்ப்புக்குச் சமாதானம் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறார்!

பாண்டிச்சேரி நிலைமைகளை 'அடுத்த வீட்டில் நடைபெறும் குடும்பத்துச் சண்டை'களாகக் கருதி, அங்கே உள்ள எதிர்க் கட்சி அமைப்புகள் 'வேடிக்கை' பார்க்கலாம்!

ஆனால், அனைத்திந்தியக் காங்கிரசின் திறமையை—போக்கினை – உள்நிலைமையை ஒத்திட்டுப் பார்க்கும் உரைகல்லாகக் கொள்வார்கள், மற்ற பார்வையாளர்கள்!

அதுவும், 'மது' பற்றிய பிரச்சினையில் 'பாண்டி' இப்படி ஆகியிருப்பது, காங்கிரசின் 'கறை' படிந்த நிலைமைக்கு மேலும் ஓர் இழுக்கினைத் தருகிறது!

★ அரசியல் இயலாமையில் காங்கிரசு சிக்கித் தவிப்பதற்கு சமீபத்திய உதாரணங்கள் — மணிப்பூர், பாண்டிச்சேரி — சின்னஞ் சிறு ஆட்சிப் பகுதிகள்—அவர்கள் ஆளும் இடங்கள்!

★ அங்கே உள்ள 'கூரை'களில் மேயும் 'கோழி'களைப் பிடிக்க முடியாதவர்கள்தான், 'கோபுரத்தின் மீதேறி 'கைலா'யத்துக்கு வழி காட்டப் போகிறார்களாம்!

—எஸ். ஆர்.

சென்னை சீரணியினருக்கு:

வடசென்னை 32-வது வட்டம் கல்யாணபுரத்தில் வடிகால் வெட்டும் பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள விரும்பும் சீரணித் தோழர்கள் (பெயர்ப் பதிவு செய்தவர்களும், பிறரும்), நாள் தோறும் காலை 8-மணிக்குள் சட்டமன்ற உறுப்பினர் பழைய விடுதிக்கு வந்துசேர வேண்டுகிறேன். அங்கிருந்து கல்யாண பிரம் செல்ல வண்டி வசதி செய்யப்பட்டுள்ளது.

6—10—67 முதல் இரவிலும் பணியாற்ற வசதி செய்யப்பட்டுள்ளது. தினசரி 8-மணிக்கு மவுண்ட் ரோடு சட்டமன்ற உறுப்பினர் பழைய விடுதியிலிருந்து வண்டி புறப்பட்டுச் செல்லவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது"

என்று சீரணித் தலைவர் நீலநாராயணன் அறிவிக்கிறார்.

சீரணிக்குச் செயலாளர்கள்

சென்னை, அக். 6—

சென்னை மாவட்டச் சீரணிக்கு இரு செயலாளர்களைத் தமிழக அரசு நியமித்துள்ளது.

தென் சென்னைச் சீரணிக்குச் செயலாளராக பி. கே. முத்துராமலிங்கமும், வடசென்னை சீரணிக்கு சு. பாலனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காந்தி பிறந்த நாள்

சென்னை 4-வது வட்டம் எம். ஜி. ஆர். மன்றத்தின் சார்பில் காந்தி பிறந்த நாள் விழா, சீரங்கம்மாள் தெருவில், 7—10—67 மாலை 7-மணிக்கும், 8—10—67 காலையும் நடைபெறும்; விழாவிற்கு வட்ட தி. மு. க. செயலாளர் பி. கே. மூர்த்தி தலைமை தாங்குவார்; அறிஞர் அண்ணா, மு. கருணாநிதி, இரா. நெடுஞ்செழியன், கி. மனோகரன் ஆகியோர் ஆற்றிய உரைகள் ஒலிபரப்பப்படும்.

குழுக் கூட்டம்

பெங்களூர் 11-வது வட்டம் சீராமபுரம்—பாசியம் நகர் தி. மு. க. உறுப்பினர் கூட்டம், 8—10—67 காலை 10-30 மணிக்கு கழகப் பணிமனையில் நடைபெறும்.

நடக்க இருப்பவை

8—10—67

மேட்டூர்

அண்ணா அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்குப் பொதுமக்கள் சேவா சங்கத் திடலில்; தலைவர்: என். மணி; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., அ. பாலு, க. கு. சின்னுசாமி, வி. கன்னியப்பன் பி.ஏ.பி.எல்., பெ. அரங்கராசு.

கரூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு வஞ்சியம்மன்கோயில் திடலில்; தலைவர்: ப. அ. கண்ணன்; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.ஏ பி.எல்., அ. தியாகராசன் பி.ஏ.பி.எல்., பரமத்தி சண்முகம்.

உடுமலை

16-வது வட்ட தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு எம்.ஜி ஆர். திடலில்; பேசுவோர்: குன்னத்தூர் க. அன்பரசு, குழந்தைவேல் பி.ஏ.பி.எல்., அப்பாசு, மா. சேரன், மற்றும் பலர்.

சென்னை 84-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு கோபதி நாராயணசாமி செட்டித் தெருவில்; தலைவர்: எம். நாகப்பன்; பேசுவோர்: வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., இராம. அரங்கண்ணல்எம்.எல்.ஏ., முரசொலி மாறன் எம்.ஏ., கே. கோவிந்தசாமி எம்.சி., எஸ். வி. வேலு.

பஞ்சலிங்கபுரம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு; தலைவர்: அ. பழனியப்பன்; பேசுவோர்: மு. சின்னச்சாமி எம்.எல்.ஏ., ப. ச. விசுவநாதம், டாக்டர் சேதுபாஸ்கரன், கோ. இராமசர்மி.

பெங்களூர் 12-வது வட்டம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 5-30 மணிக்கு இராமச்சந்திரபுரம் முதல் வீதியில்; தலைவர்: எம். முனுசாமி; பேசுவோர்: எல். கணேசன் எம்.எல்.ஏ., எஸ். என். நாராயணன், டி. கிள்ளிவளவன் பி.ஏ.பி.எல்., ஏ. இராமசாமி பி.காம்.,பி.எல்., டி. திராவிடமணி, எஸ். வி. பதி, வி. கே. செயபாலன்.

பொள்ளாச்சி

திருவள்ளுவர் மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு கோட்டூர் ரோடு, பாரதி திடலில்; தலைவர்: இரா. முத்துச்சாமி பி.ஏ.பி.எல்.; க. அறிவழகன் எம்.ஏ.,எம்.எல்.சி., அ. மாரியப்பன் பி.ஏ.பி.எல்., தி. இராமசாமி, மு. கண்ணப்பன் எம்.எல்.ஏ., ஈ. இராமசாமி எம்.எல்.ஏ., பி. என். இராமானுசம்.

கோவை

பொன்னி நூலகச் சார்பில் மாலை 6-மணிக்கு அழகிரி திடலில்; தலைவர்: கே. ஆர். சாமி; பேசுவோர்: ஆ. திராவிடமணி, கே. கோவிந்தராசு எம்.எல்.ஏ., எஸ். ஏ. இராசமாணிக்கம் எம்.சி.

அப்துல்லாவுக்கு பரிந்துரைக்கிறார் அயூப்கான்

காஷ்மீர் அமைதிக்குப் பாகிஸ்தான் தலைவர் தரும் யோசனை

"ஷேக் அப்துல்லா, மிர்சா அப்சல் பேக் ஆகிய இருவரும் இந்திய அரசினரால் விடுதலை செய்யப்பட்டாலன்றி, காஷ்மீரில் அமைதி தோன்றாது"

என்று, பாகிஸ்தான் அதிபர் அயூப்கான், தனது நாட்டு மக்களுக்கு நிகழ்த்தியுள்ள வானொலி உரையில் குறிப்பிட்டுள்ளார்.

தமது 9 நாள் இரஷ்யப் பயணம் பற்றிப் பேசிய அவர், மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"காஷ்மீர் பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்ப்பதில் இந்தியாவுக்கு அக்கறை இல்லை.

"எதிரி நாடு ஆயுதங்களைத் திரட்டிக் கொண்டிருக்கும் போது, பாகிஸ்தான் மட்டும் சும்மா இருக்க முடியாது.

'காஷ்மீரில் நிலைமைகள் மாறி வருகின்றன' என்ற யூகத்தில், அப்துல்லாவை, இந்திய அரசு விடுதலை செய்யப்போவதாக ஏற்கனவே வெளிவந்துள்ள செய்திகள் இங்கு நினைவுகூரத்தக்கது.

காமராசர் — கருத்திருமன் பார்வைக்கு:

'கொள்முதல் விலையைக் கூட்டக் கூடாது'— 'சென்ற ஆண்டு அளவே இருக்கவேண்டும்'— திட்டக் குழுவின் எச்சரிக்கை கலந்த அறிவிப்பு

"நடப்பு அறுவடையில் (காரிப்) கொள்முதல் செய்யும் தானியங்களின் விலை நிலவரத்தை, எந்தக் காரணம் பற்றியும் மாநில அரசுகள் அதிகரிக்கக் கூடாது" என்று எச்சரித்து, திட்டக் குழு அறிவித்திருக்கிறது.

திட்டக் குழுவின் இந்த அறிவிப்பை புதுடில்லியில் வெளியிட்ட அதன் துணைத் தலைவர் டாக்டர் காட்கில், மேலும் கூறியிருப்பதாவது:—

"சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் கொள்முதல் விலையைக் கூட்டுவது—அதிகரிப்பது, அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

"கடந்த ஆண்டு நிர்ணயிக்கப் பட்ட விலைகள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவையே; எனவே, இதற்குமேல் அதிகரிப்பு எதும் இல்லாமல் எல்லா மாநிலங்களும் பார்த்துக்கொள்ள வேண்டும்."

இதற்கு நேர்மாறாக, காங்கிரசுத் தலைவர் காமராசரும், தமிழக எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமனும், 'நெல் கொள்முதல் விலையினை இன்னும் கூட்ட வேண்டும்—விவசாயி மட்டும் [illegible] மாந்தவனா?' என்ற கருத்தில் கடந்த சில கிழமைகளாகப் பேசிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

புலவர் பொன்னிவளவன்

சுற்றுப்பயணம்

அக். 7, 8, 9: பெரம்பலூர்த் தொகுதி; 11: கள்ளிப்பட்டி; 21: கும்பகோணம்; 22: நெய்வேலி; 28: இராசிபுரம்.

புலவர் அறிவுடைநம்பி

நிகழ்ச்சிகள்

அக். 7, 8: வால்பாறை, சோலையாறு நிகழ்ச்சிகள்; 13, 14, 15: சென்னை; 20: திருக்கோவிலூர் பகுதி; 21: திருவில்லிபுத்தூர் பகுதி; 22: மதுரை 31-வது வட்டம்; 23: ஆண்டிப்பட்டி, கண்ணியம்பிள்ளைப்பட்டி; 25—28: சென்னை; 29, 30: பெங்களூர்; நவ. 1—3: சென்னை.

கலை நிகழ்ச்சி

சென்னை 17-வது வட்டம் தி. மு. கழக ஆதரவாளர்கள் சார்பில் 8—10—67 மாலை 6-மணிக்கு கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் எம். ஆர். ஆர். வாசு தலைமையில், ந. மா. முத்துக்கூத்தன் குழுவினரின் 'அறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாறு' என்னும் வில்லுப் பாட்டுக் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

முக்கடல் கூடும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டுப் பயணிகளை ஈர்த்து அதன் மூலம் அந்நியச் செலாவணி வருவாயைப் பெருக்கவும் நாங்கள் பெருமளவுக்கு உதவ முடியும் என்று நம்புகிறோம்.

உலக அரங்கில், மிகச் சிறந்த சுற்றுப்பயண இடங்களுள் ஒன்றாக நமது நாட்டை உருவாக்கும் தலையாய பணி, விரைவிலேயே நிறைவேறிவிடும்."

மறைவு

சென்னை, அக். 6—

'நம் நாடு' அலுவலகத்தில் துவக்க கால முதற்கொண்டு பணிபுரிந்து, இரண்டாண்டுகளுக்கு முன்பு ஓய்வு பெற்ற திரு. என். ஏ. தனபால் (நாயுடு) அவர்கள், தமது 65-வது வயதில் நேற்று இயற்கையெய்தினார் என்பதை அறிந்து வருந்துகிறோம்.

அவரைப் பிரிந்துவாடும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம். (ஆ—ர்.)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13, [illegible]